மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
(வளர்ச்சிப் பிரிவு),
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

ந.க.எண்.26515/2022/பஅ2-2

நாள்: 14.10.2022

## குறிப்பாணை

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி அலகு - ஈரோடு மாவட்டம் - அந்தியூர் வட்டாரம் - திரு.(லேட்).செ. வெங்கடேசன், உதவியாளர் - 10.02.2021 அன்று பணியிடைக்காலமானது - வாரிசுதாரர் மகன் திரு.வெ. நவநீதன் என்பவர் கருணையடிப்படையில் பணிநியமனம் - இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது - அரசாணை நகல் அனுப்புதல் – சார்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக கடித ந.க.எண்.17320/2021/பஅ2, நாள்: 28.02.2022.
2. அரசாணை (4ப) எண்.31, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(பஅ-4) துறை, நாள்: 01.07.2022.
3. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் ந.க.எண்.13051/2021/டி2, நாள்: 29.09.2022.

-----------

ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் உதவியாளராகப் பணியாற்றி 10.02.2021 அன்று பணியிடைக்காலமான திரு.(லேட்).செ. வெங்கடேசன் என்பவரின் வாரிசுதாரர் மகன் திரு.வெ. நவநீதன் என்பவருக்கு பார்வை 2-ல் காணும் அரசாணையின்படி தனியர் பணியில் சேர்ந்த நாளான 07.02.2022 மு.ப. முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்காண் அரசாணை நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அரசாணை நகலினை தனியருக்கு சார்வு செய்து சார்வு நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்திட சென்னிமலை வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு: அரசாணை நகல்

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

14/10/2022

பெறுதல்

திரு.வெ.நவநீதன்,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம், சென்னிமலை.
(ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், சென்னிமலை மூலமாக)
(இரு நகல்களில் ஒன்றினை தனியருக்கு சார்வு செய்து மீள அனுப்பும் பொருட்டு)

நகல்: ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், சென்னிமலை.

சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – ஈரோடு மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான திரு.செ.வெங்கடேசன் என்பவரின் மகன் திரு.வெ.நவநீதன், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.அ.4) துறை**

அரசாணை (4ப) எண். 31

நாள்: 01.07.2022
சுபகிருது, ஆனி-17,
திருவள்ளுவர் ஆண்டு-2053,

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ந.க.எண்.17320/ 2021/ப.அ2, நாள் 24.01.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.13051/2022/டி2, நாள் 18.04.2022.

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து 10.02.2021 அன்று காலமான திரு.செ.வெங்கடேசன் என்பவரின் மகன் திரு.வெ.நவநீதன் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ஈரோடு மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, 07.02.2022 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த

பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.வெ.நவநீதன் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 27.07.2021 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 30.11.1997 என்றும், விண்ணப்பம் அளித்த நாளில் தனியரது வயது 23 எனவும், பணி நியமன நாளில் தனியரின் வயது 24 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ள ஈரோடு மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரை உரிய அசல் ஆவணங்களுடன் அரசால், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின்னர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.வெ.நவநீதன் என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இளநிலை உதவியாளர் பதவியில் 07.02.2022 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாரா எண்.9729/ட்டி/2022, நாள் 24.5.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அலுவல் சாரா எண்.2498837/ஜி1/2022, நாள் 24.6.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ.அமுதா,**

**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு மாவட்டம்.

மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15.
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், ஈரோடு மாவட்டம்.

**நகல்:**

திரு.வெ.நவநீதன், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, ஈரோடு மாவட்டம்.
(**வழி**: மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
உதிரி / இருப்புக் கோப்பு.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**